13th November 1961]

போட்ட கேள்வி சரியா, தவறு என்பது வேறு விஷயம். ஆனால் யூனிவர்சிடியைப் பற்றிக் கேள்வி கேட்டதும், ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள் வரிந்து கட்டிக்கொண்டு வருவதுதான் எனக்கு ஆச்சரிய மாக இருக்கிறது. அது ஒருபுறம் இருக்கட்டும். நண்பர் தியாக ராஜன் அவர்கள் அவர்களுக்குள்ள அதிகாரம் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காக ஒரு கேள்வி போட்டார். அவர் போட்ட முறை வேண்டுமென்றால், கொஞ்சம் கடுமையாக இருந்தது என்று சொல்லலாம். யூனிவர்சிடியைப் பற்றிக் கேள்வி தாராளமாகக் கேட்கலாம். மதுரையிலே புதிதாக சர்வகலாசாலை ஒன்று வேண் டாமென்று சொல்கிறார்கள். கோயம்புத்தூரிலே ஒரு சிறிய அளவிலே டெக்னிகல் யூனிவர்சிடி ஆரம்பிக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். இது அதிகாரத்தைப் பற்றியதே ஒன்றுமில்லை. எந்த முறையில் நம்முடைய படிப்பின் தரத்தை உயர்த்துவது என்பதேயாகும். ஒருசிலர் சர்வகலாசாலை ஒன்று வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்போதுதான் கல்வியின் வளர்ச்சிக்கு வசதி யாக இருக்குமென்று அவர்கள் கருதுகிறார்கள். மற்றும் சிலர், புதிதாக மற்றொரு சர்வகலாசாலை வேண்டாம், அப்படி ஆரம்பித் தால், கல்வியின் தரத்தை ஒரேயளவில் காப்பாற்ற முடியாது என்று கருத்து தெரிவிக்கிறார்கள். இதை யோசித்துத்தான் முடிவெடுக்க வேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். எல் லோரும் ஒரே மனப்பான்மையில் முடிவெடுப்போமானால், இன்னும் சௌகரியமாக இருக்கும்.

Eviction of Cultivating Tenants

* 2034 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) பூமிதான இயக்கத் தலைவர் வினோபா அவர்களிட மிருந்து முதல் மந்திரி அவர்களுக்கு சாகுபடியாளர்களை நிலத் திலிருந்து வெளியேற்றக் கூடாதென்பதைப் பற்றிய லெட்டர் வந்ததா ?

(இ) அதன் முழு விவரமென்ன ?

(உ) என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) No, Sir.
(இ) & (உ) Do not arise.

Regional Development

* 2035 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have stressed at the meeting of the National Development Council held during May 1961 the need for evolving a scheme for achieving balanced regional growth; and

(*b*) if so, the details thereof?